# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :– | S.C.No.302/2015 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண் | :– | அ.சா–26 (PW–26) |
| பெயர் | :– | சண்முகம் |
| கணவரின்/தகப்பனாரின் பெயர் | :– | |
| ஊர் | :– | |
| வருவாய் வட்டம் | :– | |
| சமூகம் (சாதி) | :– | |
| தொழில் | :– | |
| மதம்/சமயம் | :– | |
| வயது | :– | |

**2025–ஆம் ஆண்டு ஜுன்திங்கள் 23 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

சான்றாளரின் கையொப்பம்

எதிரிகள் தோன்றினர். எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல் விசாரணை:–**

நான் தமிழ்நாடு காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று சென்னையில் வசிக்கிறேன். நான் கடந்த 06.05.2015 ஆம்

தேதியன்று சேலம் மாவட்ட நில அபகரிப்பு பிரிவு காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது ஆட்டையாம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.317/2014 என்ற வழக்கு சம்மந்தமாக ஏற்கனவே சேலம் மாவட்ட நில அபகரிப்பு பிரிவின் குற்ற எண்.35/2012 என்ற வழக்கில் சுந்தரமூர்த்தி என்பவர் புகார் கொடுத்து பதிவு செய்து வைத்திருந்த இந்த வழக்கு சம்மந்தமாக ஆட்டையாம்பட்டி காவல் ஆய்வாளர் என்னிடம் வழக்கின் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை, அடைப்பு காவல் அறிக்கை, இறுதியறிக்கை ஆகிய ஆவணங்களின் சான்றிட்ட நகலை பெற்று என்னிடம் இது சம்மந்தமாக விசாரித்தார். சுந்தரமூர்த்தி என்பவர் நில அபகரிப்பு பிரிவில் கொடுத்த புகார் **அ.சா.ஆ.34** ஆகவும் அந்த புகார்மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை **அ.சாஆ.35** ஆகவும் விஜயன் என்பவரையும் முருகேசன் என்பரையும் கைது செய்து நீதிமன்ற காவலில் வைக்க கொடுத்த வேண்டுகோள் கடிதம் **அ.சாஆ.36** ஆகவும் அந்த வழக்கின் இறுதியறிக்கை **அ.சா.ஆ.37** ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன. இந்த வழக்கின் புலனாய்வு அதிகாரி என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

நான் கைது செய்த விஜயன், பத்திர எழுத்தர் முருகேசன் ஆகியோர்களுக்கு எதிராக அந்த சமயத்தில் நில அபகரிப்பு சம்மந்தமாக பல புகார்கள் கொடுக்கப்பட்டன என்றால் சரிதான். கு.எண்.35/2012 வழக்கில் நிகழ்நிலை புகார்தாரரும் எதிரிகளும் சமரசம் ஆகி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு நசித்திடப்பட்டது என்றால் சரிதான்.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.